வள்ளி தெய்வயானை ஏசல்

சென்னை-இட்டா

பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்

செ... ...ர்ந்தி பிரஸ்

இதன் விலை ... அணா 1

T016984
Sarasvati Mahal Library. Thanjavur

உ

வள்ளி தெய்வயானை ஏசல்

விநாயகர் துதி வெண்பா.

சீரோங்குந் தென்னாட்டிற் செழிக்கு மயூரமலைப்
பேரோங்கு மாமறைசைப் பெம்மான்றன் — நேரோங்கு
குஞ்சரிக்கும் கானக் குறத்தியர்க்கு மேசல்சொலத்
துஞ்சம் விகசி னைசாவருள் தா:

திருவற்றிலகு சங்கை என்ற சாவடிச்சிந்து வர்ணமெட்டு.

தெய்வயானை சொல்லுதல்.

1 ஆரடி சிறுக்கி யெந்தன்
நாயகன் பின்னால் வந்தவள்
அப்புறத்தி லேவிலகி நில்லடி வெகு
வெப்புடன்வந் திருவந்தாய் சொல்லடி.
ஆறுமாமுக வேலனென்றவர்
யாருவந்தவை கூடினதில்
ஆகுவாயோ நீயுயர்ந்த ஜாதியே வீட்டில்
இகோநுழை யாதேகுறப் பேதையே.

வள்ளி பதில்.

2 ஜாதியை யிகழ்ந் தேயிந்த
பேதேயே நீபேசுவது
தானுனக்கு நல்லதல்ல பாரடி இனி
யானுனை மதிப்பதெங்கே கூறடி
சண்முகத்தெ தாகு வந்தேயெந்தனை
உண்மைசொல்லி புணர்ந்த கந்தனை
தன்னிலிடு யானழைத்துப் போகிறேன் என்றன்
செல்வத்தந்தை தாயின்வீடு சேர்கிறேன்

தெய்வயானை சொல்லுதல்.

3 நானழைத்துப் போவேனென்று
நானுரைத்த இன்னதாகி

நங்கையேயுன் நாவையறுப் பேனடி திருச்
செங்கைவேல னுக்குப்பெண்டு நானடி
நாழிகையொடு வேளைலக்கினம்
ராசியுந்திதி நாள்நக்ஷத்திரம்
நன்முகூர்த்தம் பார்த்துபொரிசிந்தினேன் அன்று
நானல்லோ கிழக்குமுகம் குந்தினேன்

வள்ளி பதில்.

4 கொட்டுமுழக் கோடுதாலி
கட்டிக்கொண்டு வந்திருக்கும்
பட்டபவஸ்திரீ செட்டகேடு பாரடி தந்தை
கட்டிக்கொடுத் தான்வலியத் தேரடி
கொச்சையென்பதும லச்சையென்பதும்
சீச்சீகொஞ்சமும் வைச்சிலாதவோர்
கொம்பனையேவார்த்தையென்ன ராங்கி நீ இங்கு
கூரவந்தாய் மெத்தமெத்த வோங்கி நீ

தெய்வயானை சொல்லுதல்.

5 வார்த்தையென்ன ராங்கியென்று
பாரத்துமிக பேசாதடி
வைத்திடுவேன் கன்னமதில் மூந்தியே உந்தன்
மானவெட்கம் ரெண்டும்விட்டு வந்தியே
வாக்யமுங்கன போக்கியமும் வுந்தன்
பாக்கியமுங்குடி சிலாக்கியமுமிந்த
வையகத்தோர் கண்டுசிறிப் பாரடி குறத்
தையலே பலரும்நகைப் பாரடி

வள்ளி பதில்.

6 கண்டுசிரிப்பா ரெனவே
யொண்டொடியே சொல்லவந்தாய்
விண்டலத்தில் வாழுந்தந்தை கேளடி ஐயோ
பண்டுசூர பத்மனுலந் நாளடி

கனகபொற்கிரி யதனைவிட்டுமே
தமணியக்காரி மூழையிலுற்றுமே
கண்ணீர்விட்டழுத துண்டோ மெள்ளவா நீங்கள்
தண்ணிக்கன் றலைந்தநாளைச் சொல்லவா

தெய்வயானை சொல்லுதல்.

7 தண்ணிக்கன்றலைந் தோமென்று
சொன்னகுற பேதையேகேள்
தஞ்சமென்று வாசலில் நின் றஞ்சியே பழுங்
கஞ்சிகூழ்வா ராச்சியென்று கெஞ்சியே
சாப்பிடுங்கறி போட்டிடுமிலை
தோட்படுஞ்சுரை கூட்டில்ரொப்பியே
தானேதிங்கும் அற்பஜாதி யல்லடி காட்டுப்
பூனைதிங்கும் சேதிபொய்யோ சொல்லடி

வள்ளி பதில்.

8 சூரனோடு சிங்கமுகம
தாருகனுன் றந்தைதன்னைத்
தோகையே விரட்டிவிட வில்லையா வுந்தன்
சொந்ததேவர் மீன்சுமந்து வல்லையா
தொட்டதும் சிறை பட்டதும் அடி
பட்டதும வுதை பட்டதும்வாயாற்
சொல்வதற்கு வெட்கமாகத் தோணுதே யெந்த
னுள்ளமு முரைக்கமிக நாணுதே

தெய்வயானை சொல்லுதல்

9 வெட்கமாகத் தோணுதென்று
பக்குவமாய் சொலலவந்தாய்
வேறேகதி யுங்களுக்கே ஏதடி எங்குந்
தேர்திருவி ழாவிலவந்து பாரடி
மெத்தவுஞ்சன முற்றகும்பலில்
வைந்திருக்குமோர் கத்திரிகோவில்

மேலுமே மணியறுப்பீர் பாரடி அந்த
போலீசார் பிடித்துதைப்பார் தேரடி

வள்ளி பதில்

10 போலீசார் பிடித்துதைக்கும்
ஜாதியென்றி கழ்ச்சிபேசும்
வேலையற்ற சக்களத்தி போடிபோ பெருஞ்
சாலமுற்ற மிட்புலச்சி வாடிவா
புன்சடைப்ப மஞ்சுதற்குறு
வஞ்சியென்று மிஞ்சுருயடி
குஞ்சர மளித்தபெண் நீ யல்லவா நானும்
பஞ்சரக்கி ளியென்பது மெள்ளவா

தெய்வயானை சொல்லுதல்

11 பஞ்சரக்கிளி யென்பதாம்
மிஞ்சி மிஞ்சி பேசாதடி
பட்டியேவுன் மானவெட்கம் போமடி நீங்கள்
கட்டுவது கூட்டைமுற மாமடி
பானைசட்டியை கூடைமீதினி
லேயெடுத்துமெல் லோருமாய்த்திரி
பானல்விரு பைங்குறத்தி நீயடி யொரு
மான்வயற்றி லேயுதித்த சேயடி

வள்ளி பதில்.

12 பைங்குறத்தி யென்றுயென்னை
லொங்க லொங்க பேசாதடி
அங்குவந்தேன்உன்புருஷன் ருழ்ந்தனர்எந்தன்
பங்கயப்பா தத்திலேண்டி வீழ்ந்தனர்
அழகுதன்னிலே எனக்குதுடியோ
உலகிலுனக்குநான் சளைச்சகுடியோ
அண்டையிலே வந்துவந்து வோடுராய் என்
கொண்டைமயிர் மீதுகைகையைப் போடுராய்

தெய்வயானை சொல்லுதல்,

13 கொண்டையிலே மீதுகைமை
கொண்டுவெந்து போட்டேனிதோ
கூப்பிடடி நின்சலுகைக் காரனை யந்த
கோழியங் கொடிதரித்த வீரனை
கொண்டவள்மனைக் கின்று நீவரக்
கொண்டதைரிய நன்று நன்றடி
கூத்தியாளுக் கவ்வளவு செல்லுமா வெகு
நேததிநேத்தி யுந்தன்ஞாயம் வெல்லுமா

வள்ளி பதில்.

14 கூத்தியர்க்கு அவ்வளவா
வார்த்தையென்று யெந்தனிட
கொண்டையிற்கை போடும்படி யாச்சுதா மலே
குன்றில்வாழ் குறவர் கும்பு போச்சுதா
குகனேவோசண் முகனே யுமையவள்
மகனேசரவண பவனேயிந்தக்
கோலமெனைச்செய்யவெண்ணங் கொண்டீரே அந்த
நீலமயி லேறிவந்து நின்றீரே

தெய்வயானை சொல்லுதல்.

15 நீலமயிலே றும்வடி
வேலனையழைக் கிறாயுன
நெஞ்சிலுப்பை வைத்துசுடு வேனடி யார்க்கு
மஞ்சிடாப் பெரியசாமி நானடி
நில்லு யெதிர்வரச் சொல்லுமெனைப்பேசச்
சொலலு நின்மொழி செல்லுஞ் செல்லும்
ஞாயமெனன சாக்ஷியென்ன வைக்குறாய் எந்த
நாச்சியாள் வீட்டினில்வந்து நிற்குறாய்

சுப்பிரமண்யர் தெயவயானைககு சமாதானம கூறுதல்

16 தேவராஜன் பெற்றெடுத்த
கோவையிதழ்ப்பைங் கொடியே

சித்தத்திற் றயவுவைத்துக் கேளடி எந்தன்
புத்திகெட் டனைத்திட்டாலும் பாரடி
சேலைதப்பவும் வேலைசெய்யவும்
மாலைகட்டவும் ஆளொருத்தியை
சேர்த்துவைத்தாரென்று பெண்ணரிக்கேன்னடி என்னை
பார்த்தவர் சிரிப்பாரென்று தள்ளடி

தெய்வயானை சொல்லுதல்.

17 பார்த்தவர் சிரிப்பாரென்று
வார்த்தைசொல்ல வந்தீரின்று
யானைகட்டி வைதொடவும் யோக்கியமோ மிக்கு
நாணயமாய் பேசவந்தீர் லோக்யமா
ஓய் பாவனே பன்னிரு கரனோருக்குட
தாவேசரவண பவனே இவள்
பட்டணத்தி லெச்சில் தின்றும் நாடிலே நாமுந்
தொட்டுக்கொள்ள வென்னவுண்டு நீதியே

சுப்ரமண்யர் பதில்

18 தொட்டுக்கொள்ள நீதியில்லா
விட்டாலும் நானென்னசெய்வேன்
பட்டுக்கொண்டேன் எங்கேயினி போகுவேன் அவளை
விட்டுவிட்டா லிப்பொழுதே சாகுவேன்
சொல்லுமென்னிட வார்த்தைநம்பிடு
தோகையேயொரு கோடிதும்பிடு
துன்பத்திலே யென்னைவிட்டி டாதடி குறக்
கும்புவுத்தா லேசிலேபோ காதடி

* சுப்ரமண்யர் வள்ளியம்மனுக்கு சமாதானம் கூறுதல்

19 செந்தினைப் புனத்துவேடர்
சுந்தரத்துடன் வளர்த்த
தென்மொழியே கேளாயொருவாக்கியம் எல்லாந்
தானேயவன் கொண்டுவந்த பாக்கியம்

தேவராஜனென் மாமனாரிதை
யேதெரிந்திடில் கோபமாகுவார்
செப்புகின்றேன் என்னலொன்றுமாகாது அவள்
சேவடிக்கு கும்பிடுவீண் போகாது

வள்ளி பதில்.

20 இப்படிக்கு வொத்தவுந்தன்
தப்பிலித் தனத்தைக் கண்டால்
யானுமுந்தன் பின்னேவரமாட்டேனே இவளால்
மானம்போகுவார்த்தை எல்லாங் கேட்டேனே
என்னசெய்குவேன் அண்ணமார்கள் நீ
சொன்னசொல்லினை யுண்மைகொண்டிட
ஏதேனுந்தான்மந்திரித்துபோட்டிரோவந்தால்
காதறுத்து கூத்துபார்க்க மாட்டாரோ

சுப்ரமண்யர் சொல்லுதல்

21 காதறுத்து கூத்துபார்க்கும்
ஜாதியில் வந்துபிறந்த
கண்மணியே கோபம்வைத்தி டாதடி யான்
என்னசெய்வே னிந்தவேளை யோதடி
உன் காலிலாகிலும் நானுவிழுகிறேன்
பாரும் அவள்பணக் காரன்மகளடி
காரியத்தை நீமுடித்துக் கொள்ளடி வீட்டில்
ஏறிக்கொண் டவளைவெளித் தள்ளடி

பொது.

22 கந்தநாதன் இந்த விதம்
வந்துசொல்ல தேவசேனை
காலிலேவி ழுந்தாள்கூற வள்ளியும் கண்டு
மேலும்மேலும் வாழ்த்தினளாம் மெல்லியும்
கார்த்திகேயனும் நேர்த்தியாயிதைப்
பார்த்துசந்தோஷ வார்த்தைபேசியே
கைகொட்டி சிரித்துநின்றார் கேளுமே இந்த
கவிமறைரா மசுவாமிசொற் போலுமே.